கலைத் தமிழ் இலக்கணம்

இரண்டாம் புத்தகம் பகுதி II

ஐந்தாம் படிவம் சிறப்புப் பகுதி

ஆசிரியர்
கலைப்பெரும் புலவர்
வித்துவான். **ஆ. குருசாமி ஐயா** அவர்கள்,
தலைமைத் தமிழ் ஆசிரியர்,
நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி.
கருவூர்.

T17556
R005K03

தமிழ் நாடு நூற்பதிப்பகம்,
இலிங்காயத்தார் தெரு,
உறையூர் :: திருச்சிராப்பள்ளி.

உரிமை பதிவு] **1955** [விலை 0—6—0

கலைத் தமிழ் இலக்கணம்

இரண்டாம் புத்தகம் பகுதி II

ஐந்தாம் படிவம் சிறப்புப் பகுதி

27-1-54-உ புதிய பாடதிட்டப்படி இலக்கணப் பகுதியும்
சிறப்புத் தமிழ்க்குரிய சேர்க்கையும் அமைந்துள்ளன.

ஆசிரியர்
கலைப்பெரும் புலவர்,
வித்துவான். ஆ. குருசாமி ஐயா அவர்கள்,
தலைமைத் தமிழ் ஆசிரியர், நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி,
கரூர்.

தமிழ்நாடு நூற்பதிப்பகம்
இலிங்காயத்தார் தெரு,
உறையூர் – திருச்சிராப்பள்ளி.

உரிமை பதிவு] 1955 [விலை 0—6—0

முதற் பதிப்பு — 1954.
இரண்டாம் பதிப்பு — 1955.

Approved by the Madras Text Book Committee
(For class use for High School Vth FormPart II.)
Vide fort St. George Gazette Page 26 Dated 4—5—55.

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி.

முன்னுரை

தமிழ் மொழியின் இயற்கைத் தன்மையையும், மேன்மையையும் நன்கு அறிவதற்கு இலக்கண அறிவு மிகவும் பயன்படுவதாகும். தமிழ், நாட்டு மொழியாகவும், முதன் மொழியாகவும், உயர்நிலைப் பள்ளிகளில் போதன மொழியாகவும் அமைந்துள்ளதால் மாணவர்கள் தமிழில் சிறந்த அறிவும், தேர்ச்சியும் பெறுவதற்குத் தமிழ் இலக்கணத்தை நன்கு பயில வேண்டும்.

சிறப்புத் தமிழ்க் குரிய மதிப்பெண்கள் 100-ல் உரைநடை செய்யுட்பகுதிகட்கு 50-ம், இலக்கணப் பகுதிக்கு 25-ம், தன் முயற்சி (Self Effort) நலம் பாராட்டல் (Literary Appreciation) கற்பனையாற்றல் (Creative ability) இவற்றிற்கு 25-ம் ஆகப் பகுக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்புத் தமிழில் இலக்கணத்திலும், பிற வகைகளிலும் மாணவர்கள் 50 மதிப்பெண்களைப் பெறவேண்டும்.

இதற்கேற்றவாறு 27--1--54ல் அரசாங்கத்தார் புதிதாகத் திருத்தியமைத்த இலக்கண பாட திட்டத்தை முற்றும் தழுவி இந்தச் சிறப்புத் தமிழ் இலக்கணம் விரிவாகவும், தெளிவாகவும் எழுதப்பெற்றுள்ளது. இலக்கணப் பகுதிகளில் வினுக்களுக்கு விடை எழுத வேண்டிய முறைகளும், நலம் பாராட்டல் முதலானவைகளை மாணவர்களுக்கு விளங்கும் வண்ணம் ஆசிரியர்கள் விளக்கும் முறைகளும், பாடப்பகுதியில் கேட்கவேண்டிய இன்றியமையாத வினுக்களும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழில் சிறந்த இலக்கண அறிவும், சிறப்புத் தமிழ்ப் பகுதியில் முதன்மையாகத் தேர்ச்சியும் பெற இவ்விலக்கணம் உறுதுணை புரியுமெனத் திண்ணமாக எண்ணுகின்றேன்.

இங்ஙனம்,

ஆசிரியன்.

27—1—54 கெஜட்டில் புதிதாகத் திருத்தி வெளியிட்ட இலக்கண பாட திட்டம்.

பொருள் அடக்கம் (சிறப்பு)

I. எழுத்து

1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு 5
2. உடனிலை வேற்றுநிலை மயக்கம் 6

II. சொல்

1. பெயர்ச்சொல் 7
2. வினைச்சொல் 10
3. இடைச்சொல் 13
4. உரிச்சொல் 16

III. பொது

1. தொகையில் பொருள் சிறந்து நிற்குமிடம் 17
2. மரபு 18
3. வழுவமைதிகள் – கால மரபு வழுவமைதிகள். 18
4. ஒரு பொருட் பன்மொழி, இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர். 20
5. உபலட்சணம் 22

IV. புணர்ச்சி

1. உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி 22
2. உயிரீற்றில் இயல்பாக நிற்பவை 23

V. யாப்பு

1. சீர் பிரித்து வாய்பாடு கூறுதல் 26
2. தளையின் பொது இலக்கணமும், வகையும். 27
3. வெண்டளையின் இலக்கணம் 28
4. வெண்பா வகையும், ஆசிரியப்பா வகையும். 29
5. ஆசிரிய விருத்த இலக்கணம் 33

VI. அணி

1. வேற்றுமை அணி 34
2. வஞ்சப் புகழ்ச்சி அணி 35
3. நிரல் நிறை அணி 35

VII. பொருள் இலக்கணம்

அகப்பொருள், புறப்பொருள், பொது இலக்கணம். 36
சிறப்புத் தமிழ்க்குரிய சேர்க்கை 38
வினாக்கள் 42

கலைத் தமிழ் இலக்கணம்

ஐந்தாம் படிவம் (Form V)

பகுதி II சிறப்பு (Part II)

I. எழுத்து

1. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு

அடியில்கண்ட எழுத்துக்களை வரிசை வரிசையாகத் தனித்தனியே ஒலித்துப்பாருங்கள். அவ்வொலிகள் எங்கிருந்து எழுகின்றன வென்பதைக் கூர்ந்து உணருங்கள்.

1. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. ய, ர, ல, வ, ழ, ள. இவை, கண்டத்திலிருந்து பிறக்கின்றன.

2, க, ச, ட, த, ப, ற. இவை, மார்பிலிருந்து பிறக்கின்றன.

3. ங, ஞ, ண, ந, ம, ன. இவை, மூக்கினடியிலிருந்து பிறக்கின்றன.

4. ஃ. இது, தலையினுட் புறத்தினின்றும் பிறக்கின்றது.

எழுத்தை ஒலிக்கவேண்டுமென்ற உயிரினது முயற்சியால் உள்ளே இருந்து எழுந்த காற்று மார்பு, கழுத்து, தலை, மூக்கு இவ்விடங்களில் பொருந்தி, (இதழ், நாக்கு, பல் முதலான உறுப்புக்களின் முயற்சித் தொழில்களால்) பலவகை ஓசைகளையுடைய எழுத்துக்களாகத் தோன்றுவது எழுத்தின் பிறப்பு ஆகும்.

2. உடனிலை, வேற்றுநிலை மயக்கம்.

பக்கம், மச்சம், அங்ஙனம், அன்னம், மெய்யன்.

இச் சொற்களின் இடையில் வந்துள்ள எழுத்துக்கள் தம்முடன் தாம் நின்று கூடிவந்தன. இவ்வாறு தம்மோடு தாம் கூடிவருவது **உடனிலை மயக்கம்** எனப்படும். ர, ழ அல்லாத மற்ற மெய்கள் பதினாறும் தம்முடன் தாம் வந்து மயங்கும்.

சங்கம், மஞ்சம், வெட்கப், பயிற்சி, கல்வி, மார்பு.

இச் சொற்களின் இடையில் வந்துள்ள மெய்கள் பிற மெய்களோடு கூடிவந்தன. இவ்வாறு வேறு மெய்களுடன் கூடிவருவது **வேற்றுநிலை மயக்கம்** எனப்படும்.

க, ச, த, ப நீங்க மற்ற மெய்கள் பதினான்கும் வேறு மெய்யுடன் வந்து மயங்கும்.

மெய்கள் இடையில் தம்மோடு தாம் கூடிவருவது உடனிலை மயக்கம் ஆகும்; பிற மெய்யோடு கூடிவருவது வேற்றுநிலை மயக்கம் ஆகும்.

குறிப்பு :- க, ச, த, ப நான்கும் உடனிலை மயக்கத்தில் மட்டும் வரும்; வேற்றுநிலை மயக்கத்தில் வரா. ர, ழ இரண்டும் வேற்றுநிலை மயக்கத்தில் மட்டும் வரும்; உடனிலையில் வரா. மற்றவை உடனிலையிலும், வேற்று நிலையிலும் வரும்.

நன்னூல் :— க ச த ப வொழித்த வீரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே

II. சொல்

1. பெயர்ச்சொல்

(i) விளி ஏலாத பெயர்கள்

யான், நான் ; யாம், நாம்.	தன்மைப் பெயர்கள்
நீ, நீர், நீவிர், நீங்கள்.	முன்னிலைப் பெயர்கள்
நுமன், நுமள், நுமர்.	கிளைப் பெயர்கள்
எவன்? எவள்? எவர்? எது? எவை?	வினுப் பெயர்கள்
அவன், இவள், இவர், அது, அவை.	சுட்டுப் பெயர்கள்
தான், தாம், பிறன், பிறிது, பிற.	பிற பெயர்கள்

இவை மற்ற பெயர்களைப்போல் விளியேற்று வரா.

தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், 'நு' முதல் கிளைப்பெயர்களும், வினுப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், பிற பொதுப்பெயர்களும் விளி ஏலாத பெயர்கள் ஆகும்.

நன்னூல் : நுவ்வொடு வினுச்சுட் டுற்ற னளர
வைதுத் தாம்தான் இன்னன விளியா

(ii) விளி ஏற்கும்போது மாறுபாடும் முறை

தம்பி! செல். நங்கை! வா.	இயல்பாய் வந்தது.
அன்னை-அன்னுய்! நாரை-நாராய்!	ஈறு திரிந்தது.
நண்பன்-நண்ப! புலவன்-புலவ!	ஈறு கெட்டது.
தந்தை-தந்தையே! அன்பர்-அன்பரே!	ஈறு மிகுந்தது.
மக்கள்-மக்காள்! புலவர்-புலவீர்!	ஈற்றயல் திரிந்தது.
அண்ணன்-அண்ணுவே!	பலமாறுதல்கள்.

பெயர்கள் விளி ஏற்கும்போது ஈறு திரிந்தும், ஈறு கெட்டும், ஈறு மிகுந்தும், ஈற்றயல் திரிந்தும் வரும். சில இவற்றில் பல மாறுபாடுகளைப் பெற்றும் வரும். சில இயல்பாகவும் வரும்.

(iii) ஆகு பெயர் வகைகள்

பொருளாகு பெயர் முதலான அறுவகை ஆகு பெயர்களைப் பற்றியும், அளவையாகு பெயர்களைப் பற்றியும் பொதுப் பகுதியில் விரிவாக விளக்கப் பட்டன. மேலும் பலவகை ஆகு பெயர்களைப் பற்றி ஈண்டு அறிவோம்.

சொல்லாகு பெயர் :—உரை எழுதினான். உரை என்னும் சொல்லின் பெயர், அதன் பொருளுக்கு ஆகி வந்தது. இவ்வாறு வருவது **சொல்லாகு பெயர்** எனப் படும்.

ஒரு சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயர் ஆகும்.

தானியாகு பெயர் :— கழல் பணிந்தான். கழல் என்னும் கால் அணியின் பெயர், அதனையுடைய இடமாகிய கால்களுக்குப் பெயராகிவந்தது. இவ்வாறு வருவது **தானியாகு பெயர்** எனப்படும்.

ஒரு இடத்திலுள்ள பொருளின் (தானியின்) பெயர் அவ்விடத்திற்கு (தானத்திற்கு) ஆகிவருவது தானியாகு பெயர் ஆகும்.

கருவியாகு பெயர் :—திருக்குறள் படித்தான். குறள் என்னும் வெண்பாவின் (கருவியின்) பெயர், அவ் வெண்பாவாலாகிய நூலுக்கு (காரியத்திற்கு) ஆகி வந்தது. இவ்வாறு வருவது **கருவியாகு பெயர்** எனப் படும்.

ஒரு கருவியின்—காரணத்தின் பெயர் காரியத்திற்கு ஆகிவருவது கருவி யாகு பெயர் ஆகும்.

காரியவாகு பெயர் :—அலங்காரம் படித்தான். அலங்காரம் என்னும் அணியிலக்கணத்தின் (காரியத்தின்) பெயர், அதனை உணர்வதற்குக் காரணமாகிய (கருவியாகிய) நூலுக்குப் பெயராகிவந்தது. இவ்வாறு வருவது **காரியவாகு பெயர்** எனப்படும்.

ஒரு காரியத்தின் பெயர் அதன் கருவியாகிய பொருளுக்கு (காரணத்திற்கு) ஆகிவருவது காரிய வாகு பெயர் ஆகும்.

கருத்தாவாகு பெயர்: திரு வள்ளுவரைப்படி. **திருவள்ளுவர்** என்னும் கருத்தாவின் பெயர், அவரால் செய்யப்பட்ட திருக்குறள் என்னும் நூலுக்குப் பெயராக ஆகிவந்தது. இவ்வாறு வருவது **கருத்தாவாகு பெயர்** எனப்படும்.

ஒரு கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்டதற்கு ஆகிவருவது கருத்தா வாகு பெயர் ஆகும்.

உவமையாகு பெயர்: பாவை வந்தாள். (பாவை போன்ற பெண் வந்தாள்) **பாவை** என்னும் உவமானத்தின் பெயர், உவமேயத்திற்குப் பெயராகி வந்தது. இவ்வாறு வருவது **உவமையாகு பெயர்** எனப்படும்.

உவமானத்தின் பெயர் உவமேயத்திற்கு ஆகிவருவது உவமையாகு பெயர் ஆகும்.

ஆகு பெயர்கள் ஒன்றன் பெயர் வேறொன்றிற்காகி அது மற்றொன்றிற்காகி மடிந்து (மடங்கி) வருதலும் உண்டு. அவை இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர் எனப்படும்.

கார் பெய்தது. கார் என்ற நிறத்தின் பெயர் அந்நிறத்தினையுடைய மேகத்திற்கு ஆகிவந்தது. குணவாகு பெயர். **கார்** வந்தது. கார் என்ற பெயர் மேகத்திற்கு ஆகிப் பின் மேகங்கள் திரியும் காலத்திற்கு (கார் காலத்திற்கு) ஆகிவந்தது. இது இருமடி ஆகு பெயர். **கார்** அறுத்தான். கார்—என்பது மேகத்திற்காகிப் பின் காலத்திற்காகி அக்கார் காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகிவந்தது. இது மும் மடி யாகு பெயர். திருக்குறள் படி. இது அடையடுத்த ஆகு பெயர்.

நன்னூல்: பொருள் முத லாறோடு அளவைசொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.

2 வினைச் சொல்

(i) செய்யும் என்னும் வினைமுற்று

அவன் உண்ணும். (உண்டான்) ஆண்பால்
அவள் பாடும். (பாடுவாள்) பெண்பால்

அது வரும். ஒன்றன்பால்
அவைபோகும். பலவின்பால்.

இவற்றில் வந்துள்ள **உண்ணும், பாடும், வரும், போகும்** என்பன உண்ணல், பாடுதல், வருதல், போதல் ஆகிய இத்தொழில்களை இனிச் செய்யும் என்ற பொருளில் வந்துள்ளன. இவ்வாறு வருவது செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று எனப்படும். இது படர்க்கைப் பலர்பால் ஒழிந்த மற்ற நான்கு பால் களிலும் வந்துள்ளது. இது தன்மை முன்னிலைகளில் வராது.

படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் இவற்றிற்குரியதாய் எதிர்காலத்தைக் காட்டிவரும் ஒருவகை வினைமுற்று செய்யுமென்னும் வினைமுற்று ஆகும்.

குறிப்பு : செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றும், செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சமும், செய்யும் என்னும் முன்னிலை ஏவற் பன்மையும் தம்முள் வேறுபாடுடை யவை.

அவன் **செய்யும்**–செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

செய்யும் மனிதன்–செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெய ரெச்சம்.

நீர் **செய்யும்** முன்னிலை ஏவற்பன்மை.

நன்னூல் : பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே.

(ii) பொதுவினைகள்

வந்தேன், வந்தோம். உண்டாய், உண்டீர்.	தன்மை முன்னிலை வினைகள் இருதிணைக்கும் பொதுவாய் வந்தன.

வாழ்க. அவன், அவள், அவர் ; அது, அவை ; நான், நாம், நாங்கள் ; நீ, நீர், நீங்கள்.

வேறு, இல்லை, உண்டு.	அவன், அவள், அவர் ; அது, அவை ; நான், நாம் ; நீ, நீர்.

வந்த பையன், பெண், மக்கள் ; மாடு, விலங்குகள் ; நான், நாம் ; நீ, நீர்.

வந்து போனான், போனாள், போனார் ; போயிற்று, போயின ; போனேன், போனோம் ; போயினை, போனீர்.

இவ்வினைகள் திணை பால்களுக்குப் பொதுவாக வந்தமையால் **பொதுவினை** என்பபடும்.

தன்மை வினை, முன்னிலை வினை, வியங்கோள் வினை, வேறு இல்லை உண்டு என்னும் குறிப்பு வினைகள், பெயரெச்ச வினையெச்சங்கள் இவை பொதுவினைகள் ஆகும்.

தன்மை முன்னிலை வினைகள் இருதிணைப் பொது வினை ஆகும்.

நன்னூல் : தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீரெச்சம் இருதிணைப் பொதுவினை.

(iii) எச்சத்திரிபு

பெயரெச்சத்திரிபு: "**ஆம்** பொருள்கள்" "**வாம்** புரவி"

ஆகும், வாவும் என்னும் செய்யு மென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்களின் இறுதியில் உள்ள **உயிர்** மெய்கள் கெட்டு **ஆம், வாம்** எனத் திரிந்து வந்தன.

"தென்கடற்றிரைமிசைப் **பாயுந்து**" இதில் **பாயும்** என்ற சொல் **பாயுந்து** எனத் திரிந்து வந்தது.

வினையெச்சத்திரிபு: ஞாயிறு **பட்டு** வந்தான். **பட** என்பது **பட்டு** எனத் திரிந்தது.

கண்ணன் **வந்து** பொன்னன் போனான். **வர** என்பது **வந்து** எனத் திரிந்தது.

எச்சங்கள் திரிந்து வருவது எச்சத் திரிபு ஆகும்.

அது பெயரெச்சத் திரிபு, வினையெச்சத் திரிபு என இரண்டு வகையாகும்.

(iv) உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று

யானும் நீயும் உண்டனம்; உண்டாம்; உண்டோம்.

யானும் அவனும் உண்டனெம்; உண்டோம்.

யானும் அவனும் நீயும் } உண்போம்.
யாங்களும் அவர்களும் நீங்களும் } உண்டோம்.

தன்மைப் பெயரோடு முன்னிலைப் பெயரும், படர்க்கைப் பெயரும், ஈரிடப் பெயர்களும் சேர்ந்து எழுவாயாக வந்தால் தன்மையோடு **உளப்படுத்திக்** கொண்டு தன்மைப் பன்மையில் முடியும். இது **உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று** எனப்படும்.

நீயும் அவனும் உண்டீர்.

நீங்களும் அவர்களும் உண்டீர்கள்.

முன்னிலைப் பெயரோடு படர்க்கைப் பெயரும் சேர்ந்து எழுவாயாக வந்தால் முன்னிலையோடு உளப் படுத்திக் கொண்டு முன்னிலைப் பன்மையில் முடியும். இது **உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று** எனப்படும்.

மற்ற இடப் பெயர்களையும் தன்னோடு உளப்படுத்திக்கொண்டு முடியும் பன்மை வினைமுற்று உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று ஆகும்.

அது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்று, உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று என இரண்டு வகைப்படும்.

3. இடைச்சொல்

'மன்' என்னும் இடைச்சொல்

1. அது **மன்** கொண்கன் தேரே. மன் வேறு பொருளின்றி நிற்றலால் **அசைநிலை.**

2. கூரியதோர் வாள் **மன்.** இரும்பை அறத் துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் **ஒழியிசை.**

3. பண்டு காடு **மன்.** இன்று வயலாயிற்று என்னும் ஆக்கப் பொருளைத் தருதலால் **ஆக்கம்.**

4. சிறியகள் பெறினே எமக்கீயு **மன்னே.** இப் பொழுது கழிந்தது என்னும் பொருள் தருதலால் **கழிவு.**

5. எந்தை எமக்கருளு **மன்.** மிகுதியும் அருளு**வன்** என்னும் பொருளைத் தருதலால் **மிகுதி.**

6. **மன்ற** உலகத்து **மன்னியது** புரிமோ. **நிலைபேறு.**

மன் என்னும் இடைச்சொல் **அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு** என்னும் ஆறு பொருள்களில் வரும்.

நன்னூல் : *மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்*
கழிவு மிகுதி நிலைபேறு ஆகும்.

'என' என்னும் இடைச்சொல்

1. வருக **என** அழைத்தான். வினையொடு **வந்தது.**

2. அது மரம் **என** அறிந்தேன். பெயரொடு வந்தது.

3. சரேல் எனப் பாய்ந்தது. குறிப்பொடு வந்தது.

4. கல கல என ஒலித்தது. இசையோடு வந்தது.

5. அகமெனப் புறமெனப் பொருள் இரண்டு. எண்.

6. வெள்ளென விளர்த்தது, பண்பொடு **வந்தது**

என என்னும் இடைச்சொல் **வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு** என்னும் ஆறு பொருள்களில் வரும்.

நன்னூல் : *வினை பெயர் குறிப்பிசை எண் பண் பாறினும்*
என வெனும் மொழிவரும் என்றும் அற்றே.

'தில்' என்னும் இடைச்சொல்

1. *அரிவையைப் பெருக* **தில்** *அம்ம யானே.* அரிவையைப் பெறுதல் வேட்கையை உணர்த்தலால் **விழைவு**.

2. *பெற்றுங் கறிகதில் அம்ம இவ்வூரே.* பெற்ற காலத்தறிக எனக் காலத்தை உணர்த்தலால் **காலம்.**

3. *வருக* **தில்** *அம்மவெஞ் சேரி சேர.* **வந்தால்** இன்னது செய்வேன் என ஒழிந்த சொற்பொருளைத் தருதலால் **ஒழியிசை.**

தில் என்னும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருள்களில் வரும்.

நன்னூல் : *விழைவே காலம் ஒழியிசை தில்லே.*

'அம்ம' என்னும் இடைச்சொல்

1. *அது மற் றம்ம.* சுட்டுக்கண் உரையசையாக வருதலால் **உரையசை.**

2. **அம்ம** *வாழி தோழி.* கேள் என வருதலால் **ஏவல்.**

அம்ம என்னும் இடைச்சொல் உரையசை, கேண்மின் என்ற ஏவல் இவற்றில் வரும்.

நன்னூல் : *அம்ம உரையசை கேண்மின் என்றாகும்.*

மோ, மதி, மாது, போலும், ஆம், தான், தாம், என்னும் இடைச்சொற்கள்.

மோ: *கண்டது மொழிமோ.* மதி : *சென்மதி பெரும.*	மோ, மதி முன்னிலை யசையில் வந்தன.

மாது : விளிந்தன்று **மாது.** **போலும் : வருந்தினை போலும்.** **ஆம்** ; பணியுமாம் என்றும் பெருமை. **தான் :** நீ **தான்** செய். நான் **தான்.** **தாம் :** நீர் **தாம்** வாரும். நாம் **தாம்.**	**மாது, போலும், ஆம், தான், தாம்** இவை எல்லா விடத்தும் வந்தன.

மோ, மதி என்னும் இடைச்சொற்கள் முன்னிலை அசைகளாக வரும்; மாது, போலும், ஆம், தான், தாம் என்பவை எல்லா விடங்களிலும் அசைநிலைகளாக வரும்.

4. உரிச்சொல்

(கெழு, மல்லல். கூர், கழி, தடை, வை.)

கெழு : செங்கேழ் மென்கொடி. கேழ்வரகு. நிறம்

தொல்காப்பியம் : குருவும் கெழுவும் நிறனு கும்மே

மல்லல் : மல்லல் மால்வரை. வளம்

தொல்காப்பியம் : மல்லல் வளனே.

கூர் : களிகூர் மனம். துனிகூர் எவ்வம். மிகுதி

கழி : கழிகண்ணோட்டம். கழிபேருவகை. ,,

தொல்காப்பியம் : கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.

தட : தடக்கை. பெருமை. தடமருப்பு. வளைவு

தொல்காப்பியம் : தடவும் கயவும் நளியும் பெருமை
தடவென் கிளவி கோட்டமும் செப்பும்.

வை : வைந்துனிவேல். கூர்மை

தொல்காப்பியம் : வையே கூர்மை.

III. பொது

1. தொகையில் பொருள் சிறந்து நிற்குமிடம்

1. குடம் வனைந்தான் குவி மலர். வெண் தாமரை. கயற் கண்.	குடம் முதலான முன்மொழிகள், பானை முதலான இனமொழிகளை விலக்கி நிற்றலால், முன்மொழிகளில் பொருள் சிறந்தன.
2. நிலம் உழுதான். கண் இமை. நீர்க் குவளை. செஞ் ஞாயிறு.	உழுதான் முதலான பின்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி நிற்றலால், பின்மொழிகளில் பொருள் சிறந்தன.
3. கபில பரணர், சேர சோழ பாண்டியர்.	எல்லாவற்றினும் பொருள் சிறந்தன.
4. பொற்றொடி போனாள். துடியிடை நடந்தாள்.	புறமொழிகளில் பொருள் சிறந்தன.

தொகைநிலைத் தொடர்களில் முன்மொழி, பின்மொழி, பன்மொழி, புறமொழி என்னும் நான்கு இடங்களில் பொருள் சிறந்து நிற்கும்.

நன்னூல்: முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்.

2. மரபு

ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி, குதிரைக்குட்டி. **குட்டி**

பசுவின்கன்று, யானைக்கன்று, வாழைக்கன்று. **கன்று**

கிளிப்பிள்ளை, கீரிப்பிள்ளை, தென்னம்பிள்ளை. **பிள்ளை**

கோழிக்குஞ்சு, காக்கைக்குஞ்சு, மீன்குஞ்சு. **குஞ்சு**

வாழையிலை, மாவிலை, பலாவிலை, தாமரையிலை. **இலை**

தென்னையோலை, பனையோலை. **ஓலை**

இவ்வாறு வழங்கி வருதல் **மரபு** எனப்படும்.

எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எவ்வாறு அறிவுடையோர்கள் வழங்கினர்களோ அவ்வாறே வழங்குதல் மரபு ஆகும்.

அதற்கு மாறாக ஆட்டுக்கன்று, பசுக்குட்டி, கோழிப்பிள்ளை, வாழை ஓலை, தென்னையிலை என வழங்குதல் **மரபு வழு** ஆகும்.

நன்னூல்: எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.

3. வழுவமைதிகள்

1. கால வழு வமைதி

மலை நிற்கிறது. தெய்வம் இருக்கிறது.

மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும் முக்காலத்தினும் உள்ளனவாகும். இவற்றை நிகழ் காலத்தில் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறுவது **காலவழுவமைதி** எனப்படும்.

1. உண்கின்றவன் தன்னை அழைப்பவனிடம் உண்டுவிட்டேன்; வந்துவிட்டேன். எனக் கூறுகிறான். இது விரைவினால் நிகழ்காலமும், எதிர்காலமும் இறந்த காலமாகக் கூறப்பட்டன.

2. நன்கு படித்தால் தேர்ச்சிபெற்றான். இது மிகுதி பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது.

3. எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறின் மழைபெய்தது. இது தெளிவினால் எதிர்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது.

4. நாங்கள் இளமையில் படிப்பது இப்பள்ளி. இது இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாகக் கூறப்பட்டது. இவ்வாறு கூறுவதும் காலவழுவமைதி எனப்படும்.

(முக்காலத்தினும் ஒரு தன்மையுடையனவாக நிகழும் பொருள்களை நிகழ்காலத்தில் கூறுவதும், விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு என்னும் காரணங்களால் ஒரு காலத்தை மற்றொரு காலமாகக் கூறுவதும் காலவழுவமைதி ஆகும்.)

நன்னூல் : முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத்தானே.
விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி.

2. மரபு வழுவமைதி

இப்பசு யான் கொண்டது.
இவ்வுடை யான் கொடுத்தது.
இப்புத்தகம் யான் வாங்கியது.
} செயப்படு பொருளைக் கருத்தாவைப்போல் வைத்துக் கூறப்பட்டது.

வாழி! அனிச்சமே! கேளாதது கேட்பதுபோலக் கூறப்பட்டது.
கண் உரைக்கும். பேசாதது பேசுவதுபோலக் கூறப்பட்டது.
இவ்வழி கரூர் போகும். நடவாதது நடந்ததுபோலச் சொல்லப் பட்டது.
நெஞ்சே சுடும். செய்யாதது செய்வதுபோலக் கூறப்பட்டது.

இவ்வாறு கூறுவது **மரபு வழுவமைதி** எனப்படும்.

செயப்படு பொருளைக் கருத்தாவைப்போல் வைத்துக்கூறுதலும், அஃறிணையை உயர்திணையைப்போல் வைத்துக் கூறுதலும், பிற மரபுச் சொற்கள் மாறி வழங்கிவருதலும் மரபு வழுவமைதி ஆகும்.

4. ஒரு பொருட் பன்மொழி, இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர்.

1. ஒரு பொருட் பன்மொழி

மீமிசை ஞாயிறு (மீ-மேல், மிசை-மேல்)

நாகிளங் கமுகு (நாகு-இளமை)

மாபெரும் புகழ் (மா-பெரிய)

உயர்ந்தோங்கு தேக்கு (உயர்தல்-ஓங்குதல்)

குழிந் தாழ்ந்த கண் (குழிதல்-ஆழ்தல்)

இவை **ஒரு பொருட் பன்மொழி** எனப்படும்.

ஒரு பொருளைக் குறிக்கப் பல சொல் வருதல் ஒரு பொருட் பன்மொழி ஆகும்.

அவை பொருள் சிறப்பைத் தருதலால் வழுவாகா வழுவமைதியாகும்.

நன்னூல்: ஒரு பொருட் பன்மொழி சிறப்பி னின் வழா.

2. இரட்டைக் கிளவி

குறுகுறு நடந்தது. வற்றிய ஓலை கலகலக்கும்.

மடமட எனச்சாய்ந்தது. சளசள வெனப்பேசினான்.

இவை இரட்டைக் கிளவி எனப்படும்.

சொற்கள் தனித்து வராமல் இரட்டித்து நின்று பொருளைத் தருவது இரட்டைக் கிளவி ஆகும்.

நன்னூல் : இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந் திசையா.

3. அடுக்குத் தொடர்

அன்றே அன்றே - அசை நிலை

போ போ. ஓடு ஓடு ஓடு. விரைவுப் பொருள்.

ஏ ஏ இவள். நல்குமே நல்குமே நல்குமே.
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ. } இசை நிறை

இவ்வாறு வருவது அடுக்குத் தொடர் எனப்படும்.

ஒரு சொல் பலமுறை அடுக்கிவருவது அடுக்குத் தொடர் ஆகும்.

குறிப்பு : அசைநிலையில் இரண்டு முறையும், விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலான பொருள் நிலைகளில் இரண்டு, மூன்று முறையும், இசைநிறையில் இரண்டு, மூன்று, நான்கு முறையும் அடுக்கிவரும்.

ஒருபொருட் பன்மொழி : ஒரு பொருளைக் குறிக்க வேறு வேறு சொற்கள் வரும்.

இரட்டைக் கிளவி : ஒரு சொல்லே இரட்டித்துப் பிரியாது வரும். பிந்துவரின் தனியாகப் பொருள் தராது.

அடுக்குத் தொடர் : ஒரு சொல்லே அடுக்கிவரினும், தனியே ஒரு சொல் நின்றும் பொருள் தரும்.

நன்னூல்: அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்று நான் கெல்லை முறை அடுக்கும்.

5. உபலட்சணம்

சோற்றை உண்டான். இதில் **சோறு** என்ற சொல் கறி, வறுவல், குழம்பு முதலான தன் இனத்தையும் தழுவி நிற்கின்றது.

வெற்றிலை மென்றான். இதில் **வெற்றிலை** என்ற சொல் பாக்கு, கிராம்பு, ஏலக்காய் முதலான பொருள்களையும் உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு வருவது **உபலட்சணம்** எனப்படும்.

ஒரு சொல் எஞ்சி நின்ற தன் இனத்தையும் கொள்வது உபலட்சணம் ஆகும்.

நன்னூல்: ஒரு மொழி ஒழிதன் இனங் கொளற்(கு)உரித்தே.

IV. புணர்ச்சி

1. உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சி

அவன் + பெரியன் = அவன் பெரியன் அவள் + தலை = அவள் தலை நம்பி + பெரியன் = நம்பி பெரியன் நம்பி + கை = நம்பி கை சேய் + சிறியன் = சேய் சிறியன் அவர் + பெரியர் = அவர் பெரியர் தாய் + கை = தாய் கை அவர் + தலை = அவர் தலை	வேற்றுமையில் சில மெய்கள், உயிர், யகர, ரகர மெய்கள் இவற்றின் முன் வல்லினம் இயல்பாயின.

வாணிகர் + தெரு = வாணிகத் தெரு } நிலைமொழி யீறு
நளன் + வெண்பா = நள வெண்பா } கெட்டது.

மக்கள் + பண்பு = மக்கட்பண்பு } நிலைமொழி யீறு
மக்கள் + சுட்டு = மக்கட்சுட்டு } திரிந்தது.

குமரன் + கோட்டம் = குமரகோட்டம் } ஈறுகெட
குமரன் + கோட்டம் = குமரக்கோட்டம் } இயல் பாயும் மிகுந்தும் வந்தது.

கபிலன் + பரணன் = கபிலபரணர் - இருமொழி விகாரம்

உயர்திணைப் பெயர்களின் இறுதியில் உள்ள சில மெய்களின் முன்னும், உயிர் முன்னும், யகர ரகர மெய்களின் முன்னும் வல்லினம் வரின் இயல்பாகும்; சில மெய்களின் முன் நாற்கணமும் வரின் நிலைமொழியும் வருமொழியும் விகாரம் அடைந்தும் வரும்.

நன்னூல் : பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று
மெய், வலிவரின் இயல்பாம்; ஆவி யர முன்
வன்மை மிகா; சில விகாரம் ஆம் உயர்திணை.

2. உயிர் ஈற்றில் இயல்பாக நிற்பவை

அவனா + சென்றான் = அவனா சென்றான்? } ஆ, ஏ, ஓ, யா
வீமனே + போனான் = வீமனே போனான்? } வினாமுன் வலி
கந்தனோ + செய்தான் = கந்தனோ செய்தான்? } இயல்பா
யா + குறிய = யாகுறிய? } யிற்று.

பொன்னா + செல் = பொன்னாசெல் } உயிரீற்று விளிமுன்
தம்பீ + செய் = தம்பீசெய் } வலி இயல்பாயிற்று.

உயிரீற்று வினாமுன்னும், யாவினா முன்னும், விளிப் பெயர் முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

நன்னூல்: ஈற்றியா வினா விளிப்பெயர் முன் வலி இயல்பே

உண்டனை+பொன்னா=உண்டனை பொன்னா உண்டாய்+பொன்னா=உண்டாய் பொன்னா உண்டீர்+சாத்தரே=உண்டீர் சாத்தரே	முன்னிலையில் உயிர், ய், ர் மெய்களின் முன்வலி இயல்பாயிற்று
விடு+கந்தா=விடு கந்தா ஆய்+பொன்னா=ஆய்பொன்னா பார்+கந்தா=பார்கந்தா போழ்+சாத்தா=போழ்சாத்தா	ஏவலில் உயிர், ய், ர், ழ் மெய்களின் முன் வலி இயல்பாயிற்று.

உயிரையும் ய, ர, ழ மெய்களையும் இறுதியில் பெற்று வரும் சில முன்னிலை வினை, ஏவல் வினைகளின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

நன்னூல்: ஆவியரழ இறுதி முன்னிலை வினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.

செய்யிய+போனான்=செய்யியபோனான்.	வினைஎச்சம்
உண்ட+சாத்தன்=உண்டசாத்தன்.	பெயரெச்சம்
வந்தன+குதிரைகள்=வந்தன குதிரைகள்.	முற்று
என+கைகள்=என கைகள்.	ஆறன் உருபு
பல+குதிரைகள்=பல குதிரைகள்.	அஃறிணைப்பன்மை
அம்ம+கேண்மோ=அம்ம கேண்மோ.	உரையசை

செய்யிய என்னும் வினையெச்சம், பெயரெச்சம், முற்று வினை, ஆறாம் வேற்றுமை உருபு, அஃறிணைப் பன்மைப் பெயர், அம்ம என்னும் இடைச்சொல் இவற்றின் ஈற்று அகர உயிர் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

நன்னூல் : *செய்பிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்*
பெயரினெச்சம் முற்று ஆறன் உருபே
அஃறிணைப்பன்மை அம்மமுன் இயல்பே.

அவனொடு + போ = அவனொடு போ — மூன்றன் உருபு
எனது + கை = எனது கை — ஆறன் உருபு
ஒரு + கை = ஒரு கை — எண்ணுப் பெயர்
அடு + களிறு = அடு களிறு — வினைத் தொகை
அது + குறிது = அது குறிது — சுட்டு ஈறு

மூன்றும் வேற்றுமை ஆறும் வேற்றுமை உருபுகள், எண்ணுப் பெயர்கள், வினைத்தொகை, சுட்டுப் பெயர்கள் இவற்றின் ஈற்று உகர உயிர் முன் வரும் வல்லினம் இயல் பாகும்.

நன்னூல் : *மூன்று றுருபெண் வினைத்தொகை சுட்டீ(று)*
ஆகும் உகரம் முன்னர் இயல்பாம்.

வாழிய தமிழ், வாழி தமிழ், வாழ்க தமிழ். **வியங்கோள்.**
ஆ + குறிது = ஆ குறிது. மா + பெரிது = மா பெரிது. **ஆ-மா**
கேண்மியா + கொற்று = கேண்மியா கொற்று. **மியா.**
உண்ணு + குதிரைகள் = உண்ணு குதிரைகள். **எதிர்மறை முற்று.**

வந்து + போனான் = வந்து போனான் — **வினையெச்சம்.**

ஆடு + பெரிது = ஆடு பெரிது
வரகு + தீது = வரகு தீது
எஃகு + கடுமை = எஃகு கடுமை
மார்பு + பெரிது = மார்பு பெரிது
} **குற்றுகரங்கள்.**

வியங்கோள், ஆ, மா, மியா என்னும் சொற்கள், ஆகார வீற்று எதிர்மறை முற்று, உகர வீற்று வினையெச்சம், நெடிற் றொடர் உயிர்த்தொடர் ஆய்தத்தொடர் இடைத் தொடர்க் குற்றுகரங்கள் இவற்றில் உள்ள உயிரின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

V. யாப்பு

1. சீர் பிரித்து வாய்பாடு கூறுதல்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

கற்	க	கச	டறக்	கற்	பவை	கற்	றபின்
நேர்	நேர்	நிரை	நிரை	நேர்	நிரை	நேர்	நிரை
தே	மா	கரு	விளம்	கூ	விளம்	கூ	விளம்

நிற்	க	வதற்	குத்	தக	
நேர்	நேர்	நிரை	நேர்	நிரை	
தே	மா	புளி	மா	மலர்	(இயற்சீர்கள்)

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

அரு	ளில்	லார்க்	கவ்	வுல	க	மில்	லை	பொரு	ளில்	லார்க்
நிரை	நேர்	நேர்	நேர்	நிரை	நேர்	நேர்	நேர்	நிரை	நேர்	நேர்
புளி	மாங்	காய்	கூ	விளங்	காய்	தே	மா	புளி	மாங்	காய்

கிவ்	வுலக	க	மில்	லா	கி	யாங்கு
நேர்	நிரை	நேர்	நேர்	நேர்	நேர்	நேர்பு
கூ	விளங்	காய்	தே	மாங்	காய்	காசு

பூந்	தா	மரைப்	போ	தல	மரத்
நேர்	நேர்	நிரை	நேர்	நிரை	நிரை
தே	மாங்	கனி	கூ	விளங்	கனி

தேம்	புன	லிடை	மீன்	திரி	தரும்
நேர்	நிரை	நிரை	நேர்	நிரை	நிரை
கூ	விளங்	கனி	கூ	விளங்	கனி

இவ்வாறு ஈரசைச்சீர் மூவசைச்சீர்களைப் பிரித்து அவ்வவற்றிற்குரிய வாய்பாடுகளை எழுதவேண்டும். வெண்பாவின் இறுதிச் சீர்களை அவற்றிற்குரிய **நாள், மலர், காசு, பிறப்பு** என்ற வாய்பாட்டில் கூறவேண்டும். இவ்வாறு வாய்பாடு கூறுதல் **அலகிடுதல்** எனப்படும்.

2. தளையின் பொது இலக்கணமும் வகையும்

நின்ற சீரின் ஈற்றசையுடன் வரும் சீரின் முதலசை இயைந்து நிற்பது **தளை** எனப்படும். அது **நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத் தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித் தளை, கலித்தளை** என ஏழு வகைப்படும்.

1	பூத் த + வேங்கை தே மா + நேர்	ஆசிரியச் சீர்களில் மாமுன் நேர் வந்தது. இது, நேரொன்றாசிரியத்தளை.
2	மயி லின + மக வும் கரு விளம் + நிரை	ஆசிரியச் சீர்களில் விளமுன் நிரை வந்தது. இது, நிரையொன்றாசிரியத் தளை.
3	கற் க + கச டற தே மா + நிரை கற் பவை + கற் றபின் கூ விளம் + நேர்	இயற்சீர்களில் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வந்தது. இது, இயற்சீர் வெண்டளை.
4	அரு ளில் லார்க் + கவ் வுல கம் புளி மாங் காய் + நேர்	வெண்சீரில் காய் முன் நேர் வந்தது. இது, வெண்சீர் வெண்டளை.

5 வள வய லிடைக் + கள வயின் மகிழ்	வஞ்சிச்சீரில் கனி முன் நிரை வந்தது. இது ஒன்றிய வஞ்சித்தளை
கரு விளங் கனி + நிரை	
6 தேம் புன லிடை + மீன் திரி தரும்	வஞ்சிச் சீரில் கனி முன் நேர் வந்தது. இது, ஒன்றுவஞ்சித் தளை
கூ விளங்கனி + நேர்	
7 வா ணெடுங் கண் + பனி கூ ற	வெண்சீரில் காய் முன் நிரை வந்தது. இது, கலித் தளை.
கூ விளங் காய் + நிரை	

மாச்சீர் முன் நேர் வருவது நேரொன்றுசிரியத்தளை,
விளச்சீர் முன் நிரைவருவது நிரையொன்றுசிரியத் தளை.

மாச்சீர் முன் நிரையும் விளச்சீர் முன் நேரும் வருவது } இயற்சீர் வெண்டளை.

காய்ச்சீர் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.
கனிச்சீர் முன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளை.
கனிச்சீர் முன் நேர் வருவது ஒன்று வஞ்சித்தளை.
காய்ச்சீர் முன் நிரை வருவது கலித்தளை.
இவ்வாறு தளைகள் ஏழுவகையாதல் காண்க.

3. வெண்டளையின் இலக்கணம்

கற்க + கசடற - மாமுன் நிரை	மாமுன் நிரையும் விளமுன் நேரும் வந்த இயற்சீர் வெண்டளை
கசடறக் + கற்பவை-விளமுன் நேர்	

இயற்சீர்களில் மாமுன் நேரும் விளமும் நிரையும் வருவது இயற்சீர் வெண்டளை ஆகும்.

இவை இயற்சீர்களை முதலில் கொண்டுவருதலால் இப் பெயர் பெற்றன.

2. யாதானும்+நாடாமல் - காய் முன் நேர் } வெண்சீர்
கற்றதனால்+ஆய - காய் முன் நேர் } வெண்டளை

வெண்சீர்களில் காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை ஆகும்.

இது வெண்சீர்களை முதலில் கொண்டு வருதலால் இப் பெயர் பெற்றது.

இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என வெண்டளை இரண்டு வகைப்படும். இவ்விருவகை வெண்டளைகளும் வெண்பாவில் வரும். பிறதளைகள் வரா. வெண்பாவிற்குரிய தளைகள் ஆதலால் வெண்டளை எனப் பெயர் பெற்றன. இயற்சீர் வெண்டளை ஆசிரியப்பாவிலும் வரும்.

4. வெண்பாவகையும், ஆசிரியப்பாவகையும்.

1. வெண்பா வகை

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பா ஐந்து வகைப்படும்.

1. குறள் வெண்பா

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (குறள் வெண்பா)

வெண்பாவிற்குரிய இலக்கணம் அமைந்து, இரண்டு அடியாய் வருவது குறள் வெண்பா ஆகும்.

குறைந்த அடிகளையுடையது குறள் வெண்பா.

2. சிந்தியல் வெண்பா

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை. (சிந்தியல் வெண்பா)

வெண்பாவிற்குரிய இலக்கணம் அமைந்து, மூன்று அடியாய் வருவது சிந்தியல் வெண்பா ஆகும்.

3. நேரிசை வெண்பா

கல்லானே யானும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். (ஒரு விகற்ப நேரிசை வெண்பா.)

மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா — மக்காள்நீர்
என்மக்கள் போல்கின் றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். (இரு விகற்ப நேரிசை வெண்பா)

வெண்பாவிற்குரிய இலக்கணம் அமைந்து, நான்கடியாய் இரண்டாம் அடியின் இறுதிச்சீர் தனிச்சீராய் வருவது நேரிசை வெண்பா ஆகும்.

குறிப்பு: தனிச்சீர் முதல் சீருடன் எதுகை ஒத்து இருக்க வேண்டும். நான்கடியும் ஒரே எதுகையாக வருவது ஒரு விகற்பம் என்றும், முதலிரண்டடிகள் ஒரெதுகையாகவும் பின்னிரண்டடிகள் ஒரெதுகையாகவும் வருவது இரு விகற்பம் என்றும் பெயர் பெறும்.

4. இன்னிசை வெண்பா

துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். (**ஒருவிகற்ப இன்னிசை வெண்பா**)

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம். (**இருவிகற்ப -
இன்னிசை வெண்பா**)

வெண்பாவிற் குரிய இலக்கணம் அமைந்து, நான்கடியாய் இரண்டாம் அடியில் தனிச் சீர் பெறாது வருவது இன்னிசை வெண்பா ஆகும்.

குறிப்பு : இரண்டாமடியில் தனிச் சொல் பெற்று மூன்று விகற்பமாய் வருவதும், முதலடியிலும் மூன்றாமடியிலும் தனிச் சொல் பெற்றுப் பல விகற்பமாய் வருவதும், நேரிசை வெண் பாவில் மாறுபட்டு வருவதும் இன்னிசை வெண்பாவாகும்.

5. பஃறொடை வெண்பா

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லருளுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டும்
சொல்லிய வாசார வித்து. (**பஃறொடை வெண்பா**)

வெண்பாவிற்குரிய இலக்கணம் அமைந்து, ஐந்தடி முதலாகப் பல வடிகளில் வருவது பஃறொடை வெண்பா ஆகும்.

குறிப்பு : பல்+தொடை = பஃறொடை—பல தொடைகளில் வருவது. இது, தனிச்சீர் பெற்றும் பெறாதும் ஒரு விகற்பமாயும் பல விகற்பமாயும் வரும். பஃறொடை வெண்பா பன்னிரண்டு அடிகளுக்குமேல் வராது.

2. ஆசிரியப்பா வகை

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டல ஆசிரியப்பா, அடி மறி மண்டல ஆசிரியப்பா என ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

1. நேரிசை ஆசிரியப்பா

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.

[ஆசிரியப்பாவின் இலக்கணம் அமைந்து, ஈற்றயலடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது நேரிசை ஆசிரியப்பா ஆகும்]

2. இணைக்குறள் ஆசிரியப்பா

நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இடையில் இருசீர் அடிகளும், முச்சீர் அடிகளும் விரவி வருவது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும்.

குறிப்பு : இணைக் குறள் — இரண்டு குறுகிய அடிகளாகிய இரு சீரடியும், முச்சீரடியும் இடையில் வருவது.

3. நிலை மண்டல ஆசிரியப்பா

வேரல்	வேலி	வேர்க்கோட்	பலவின்
சார	னுட	செவ்வியை	யாகுமதி
யாரஃ	தறிந்திசி	னோரே	சாரல்
சிறுகோட்டுப்	பெரும்பழம்	தூங்கி	யாங்கிவள்
உயிர்தவச்	சிறிது	உவப்போ	பெரிதே.

எல்லா வடிகளும் நாற்சீராய் வருவது நிலைமண்டல ஆசிரியப்பா ஆகும்.

4. அடிமறி மண்டல ஆசிரியப்பா

சூரல்	பம்பிய	சிறுகான்	யாறே
சூரர	மகளிர்	ஆரணங்	கினரே
வாரலை	யெனினே	யானஞ்	சுவலே
சார	னுட	நீவர	லாறே.

இதில் உள்ள அடிகளில் எந்த அடியை எங்கு எடுத்துவைத்துப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் கெடாமல் ஓவ்வோரடியிலும் பொருள் முடியும்படி அமைந்துள்ளது.

அடிகளை மாற்றி வைத்துப் பொருள் கொண்டாலும் பொருந்துமாறு அடிகள்தோறும் பொருள் முடிந்து நிற்க எல்லாம் நாற்சீரடியாய் வருவது அடிமறி மண்டல ஆசிரியப் பா ஆகும்.

5. ஆசிரிய விருத்த இலக்கணம்

ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டில் வாவென் றியம்பினன் வேந்தனென்றாள்.

ஐந்து சீர்களுக்கு மேற்பட்ட கழி நெடிலடிகள் நான்கினால் வருவது ஆசிரிய விருத்தம் ஆகும்.

குறிப்பு: இங்கு வந்துள்ளது அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம். இவ்வாறே எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் முதலானவற்றை உங்கள் பாடப் பகுதியிலிருந்து தெரிந்துகொள்க.

VI. அணி

1. வேற்றுமை அணி

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மற்—றிங்கள்
மருவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய் வரொருமா சுறின்.

இதில் திங்களும் சான்றோரும் ஒப்பர் என்று ஒப்புமைகூறி, ஆனால் திங்கள் மறுஆற்றும் சான்றோர் ஆற்றார் என்று வேற்றுமை தோன்றக் கூறப்பட்டுள்ளது. இது வேற்றுமை அணி எனப்படும்.

ஒப்புடைய இரு பொருள்களை வைத்து அவற்றிற் குள்ள வேற்றுமை தோன்றக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே.

(தண்டியலங்காரம்)

2. வஞ்சப் புகழ்ச்சி யணி

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

இதில் கயவர் தேவர் போன்றவர் எனப் புகழ்வது போலக் கூறி, அவர் மனம் போனவாறு ஒழுகும் மாக்கள் எனப் பழிக்கப்பட்டது. இது **புகழ்வது போலப் பழித்தல் ஆகும்**

பாரி பாரி என்றுபல வேத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

இதில் பாரியைப் பழிப்பது போலக் கூறி, மழையைப் போலவே அவனும் உலகைக் காப்பவன் என அவன் புகழ் கூறப்பட்டுள்ளது. இது **பழிப்பது போலப் புகழ்தல் ஆகும்.**

புகழ்வது போலப் பழித்தலும் பழிப்பதுபோலப் புகழ்தலும் வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகும்.

3. நிரல் நிறை அணி

மதி பவளம் முத்தம், முகம் வாய் முறுவல்.

மதி, பவளம், முத்தம் என்று வரிசையாக அமைந்துள்ள உவமானங்களுக்கேற்ப முறையே முகம், வாய், முறுவல் (பல்) என்னும் உவமேயங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளன.

மதி முகம், பவள வாய், முத்த முறுவல் எனக் கொள்க. இவ்வாறு முறையாக நின்று பொருள் தருவது **முறை நிரனிறை** எனப்படும்.

உடையை உணவை உண்டான் உடுத்தான்.

இவற்றை வரிசையாகக் கொள்ளாமல் உடையை உடுத்தான், உணவை உண்டான் என எதிராக மாற்றி வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு எதிராக நின்று பொருள் தருவது **எதிர்நிரனிறை** எனப்படும்.

சொற்களை நிரலே (ஒழுங்காக) நிறுத்தி, நேரே பொருள் கொள்ள நிற்பது முறை நிரனிறை அணியாகும்; எதிராக நிறுத்தி மாற்றிப் பொருள் கொள்ள நிற்பது எதிர்நிரனிறை அணி ஆகும்.

VII. பொருள் இலக்கணம்

அகப்பொருள், புறப்பொருள் எனப் பொருள் இலக்கணம் இரண்டு வகைப்படும்.

1. அகப்பொருள்

அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் அறிந்து நுகரும்வண்ணம் அகத்தே நிகழ்வது அகப்பொருள் எனப்படும். அது கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என ஏழுவகைப்படும்.

கைக்கிளை : தலைவன் தலைவி என்ற இருவருக்குள் ஒருவரிடம் தோன்றும் காதல் கைக்கிளை எனப்படும்.

ஐந்திணை : தலைவன் தலைவி என்ற இருவரிடமும் அன்பு ஒத்து நிகழும் இன்ப வாழ்க்கை ஐந்திணை எனப்படும். அது குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, பாலைத்திணை, மருதத்திணை, நெய்தற்றிணை என ஐந்து வகைப்படும்.

குறிஞ்சி: மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் ஆகும். தலைவனும் தலைவியும் காதல்கொண்டு கலந்து வாழ்வது குறிஞ்சித்திணை ஒழுக்கம் ஆகும்.

முல்லை: காடும், காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் ஆகும். தலைவன் பிரிவதும், பிரிந்த காலத்துத் தலைவி இல்லத்திருந்து ஆற்றி (பொறுத்து) இருப்பதும் முல்லைத்திணை ஒழுக்கம் ஆகும்.

பாலை: நீரும், நிழலுமற்ற வறண்ட இடம் பாலை நிலம் ஆகும். பிரிந்தவிடத்து தலைவனும் தலைவியும் ஆற்ருது வருந்துவது பாலை த்திணை ஒழுக்கம் ஆகும்.

மருதம்: வயலும், வயல் சார்ந்த இடமும் மருத நிலம் ஆகும். சில காரணங்களால் தலைவனிடம் தலைவி பிணங்கி ஊடுதலும், தலைவன் தேற்ற இணங்கிக் கூடுதலும் மருதத்திணை ஒழுக்கம் ஆகும்.

நெய்தல்: கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல்நிலம் ஆகும். கடற் செலவில் பிரிந்த தலைவனை நினைந்து தலைவி இரங்கி வருந்துவது நெய்தற்றிணை ஒழுக்கம் ஆகும்.

பெருந்திணை: ஒத்த அன்பு இல்லாமலும், பொருத்தமில்லாமலும், வெறுப்பாலும் கூடிவாழ்வது பெருந்திணை எனப்படும்.

2. புறப் பொருள்

அறம், பொருள், அரசியல், போர்முறை முதலாகப் புறத்தே நிகழ்வது புறப்பொருள் எனப்படும். அது வெட்சித்திணை, வஞ்சித்திணை, உழிஞைத்திணை, தும்பைத் திணை, வாகைத்திணை, காஞ்சித்திணை, பாடாண்திணை என ஏழுவகைப்படும்.

இவற்றின் விளக்கம் அடுத்த படிவத்தில் அறியலாம்.

சிறப்புத் தமிழ்த் தேர்ச்சிக்குரிய சேர்க்கை

சிறப்புத் தமிழுக்குரிய மதிப்பெண் (மார்க்கு) **100.** இதில் உரைப்பகுதி செய்யுட்பகுதிகளுக்கு **50**-ம் இலக்கணத்திற்கு **25**-ம், தன்முயற்சி, இலக்கியச்சுவையுணர் திறன், கற்பனை ஆற்றல் இவற்றிற்கு **25**-ம் ஆகப் பகுக்கப் பட்டுள்ளது.

இலக்கணப்பகுதியில் கவனிக்க வேண்டியவை

சொல் இலக்கணம்: பெயர், வினை, இடை, உரி, எச்சம், ஆகுபெயர் வினையாலணையும் பெயர் என்பவற்றில் எது என்பதை எழுதவேண்டும்.

உறுப்பிலக்கணம்: பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், எழுத்துப்பேறு முதலானவற்றையும், பகுதி இரட்டித்தும் வேறுவிகுதிகள் பெற்றும் பிறவகையிலும் காலங்காட்டும் விவரங்களையும் எழுத வேண்டும்.

தொடர் இலக்கணம்: அவ்வழி வேற்றுமையில் வரும் தொகை நிலைத்தொடர் தொகா நிலைத்தொடர்களில் என்னதொடர் என்பதை எழுதவேண்டும்.

வேற்றுமைப் பொருள்: இன்ன வேற்றுமையின் இன்ன உருபு இன்ன பொருளில் வந்துள்ளதென் பதையும், உருபு மயக்கம் முதலானவற்றையும் எழுத வேண்டும்.

அணி விளக்கம்: இன்ன அணி இவ்வாறு அமைந்து உள்ள தென்பதையும், உவமை முதலானவற்றைப் பொருளொடு பொருத்திக் காட்டியும் எழுதவேண்டும்.

தொடை: மோனை, எதுகை முதலான தொடைகள் அமைந்துள்ளவற்றை எழுதவேண்டும்.

அலகிடுதல், தளை விளக்கம்: சீர்களை அசைகளாகப் பிரித்து வைத்து, தேமா முதலாகிய வாய்பாடுகளை எழுதுவது சீர்பிரித்து வாய்பாடு கூறுதல்-அலகிடுதல் எனப்படும் சீரோடு சீர்சேரும்போது இடையில் தோன்றும் தளைகளை எழுதுவது தளைவிளக்குதல் எனப் படும்.

தன் முயற்சி (Self Effort): எந்தச் செய்யுட்கள் வந்தாலும் தன் முயற்சியால் பொருளும் கருத்தும் அறிந்து கொள்வது தன் முயற்சி எனப்படும். இதற்கு உரிய முறைகள் வருவன.

1. செய்யுளைப் பன்முறை படித்துப் பொதுப் பொருளை ஒருவாறு உணர்ந்துகொண்டு, எழுவாய், விளி இவற்றை எடுத்து, எச்சங்களையும், பிற சொற்களையும், பயனிலையையும் கொண்டு கூட்டி அமைத்துத் தெளிவான பொருளையும் கருத்தையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். பொருள்களை விளக்க வந்துள்ள அணி வகைகள், பழமொழிகள் நீதிகள் இவற்றையும், நேர்க்கூற்று, கவிக்கூற்று, கவியின் கருத்து இவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும்.

இலக்கியச் சுவையுணர்திறன் (Literary Appreciation):

1. செய்யுட்களைப் பன்முறை படித்துப் பொருளும் கருத்தும் அறிந்தபின் அவற்றில் அமைந்துள்ள சொல் நயம், பொருள்நயம், அடைமொழிச் சிறப்புநயம், உவமை முதலான அணிநயங்கள், தொடைநயம், நடை நயம், உள்ளுறை, சுவை நயங்கள், கவியின் கூற்றில் அமைந்துள்ள கற்பனை நயங்கள், குறிப்பாக அமைந் துள்ள பிற பொருள்கள் முதலானவற்றையும் கவி கருதிய பயனையும், இவற்றால் நாம் அடையும் பயனையும் இயன்ற வரையில் எடுத்து விளக்குதல் இலக்கியச்சுவை யுணர்தல்-நலம் பாராட்டல் ஆகும்.

இச்சொல் இவ்விடத்தில் இன்ன காரணத்தால் வந்துள்ளது, இப்பொருளைத் தருகிறதென்பதை விளக் குதல் சொல் நயம், பொருள் நயம் ஆகும். உள்ளே மறைந்து உள்ள குறிப்பு இன்னதென்பது உள்ளுறை (முன்னம்) எனப்படும். நகை, அவலம், இழிப்பு, வியப்பு அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை என்னும் சுவைகளை விளக்குதல் சுவைநயம் எனப்படும். கவி கற்பித்துக் கொண்டதை விளக்குவது கற்பனை நயம் எனப்படும். கவி வாழ்ந்த காலச் சூழ்நிலை, வரலாறு, நூல்

செய்த காரணம், நூலால் உணர்த்தும் உண்மை முதலானவற்றைக் குறிப்பால் அறிந்து வெளியிடுதல் பிற குறிப்பு நயங்கள் எனப்படும்.

கற்பனையாற்றல் (Creative ability)

எதைப்பற்றி எழுதுவதாயினும் அதைப்பற்றி நன்கு சிந்தித்து, அதற்கு வேண்டியவைகளைப் பலவகையில் திரட்டிச்சேர்த்தும், கற்பனையாற்றலால் பலவற்றை அமைத்தும் அவற்றைத் தொகைவகைப்படுத்தி வைத்துக் கொண்டு. ஒவ்வொரு பிரிவையும் எடுத்துக்கொண்டு விரிவாக எழுதுவது கட்டுரை எனப்படும். இதற்குப் புதிய புதிய கருத்துக்களைச் சிந்தித்துப் படைக்கும் கற்பனைத் திறன் வேண்டும். சிறந்த நடையில் நயங்களுடனும் சுவையுடனும் எழுதும் ஆற்றல் வேண்டும்.

அன்பு, அருள், அறம், ஒழுக்கம், கடமை முதலானவற்றைப் பற்றியவை பொருள்பற்றிய கட்டுரை ஆகும். காலை, மாலை, கடல், மலை, ஆறு, நீர் வீழ்ச்சி, சோலை, முதலானவற்றைப் பற்றியவை வருணனைக் கட்டுரை ஆகும். கோயில், திருவிழா, அணைகள், தொழிற்சாலைகள், சிற்ப நிலையங்கள், புத்தகசாலைகள், பள்ளிகள் இவற்றைச் சென்று கண்டு எழுதுவது காட்சிக் கட்டுரை ஆகும். புலவர்கள், அரசர்கள், விஞ்ஞானிகள், தொண்டர்கள் முதலானவர்களைப்பற்றி எழுதுவது வரலாற்றுக்கட்டுரை ஆகும். நாடு, மக்கள், தொழில்கள், வாழ்க்கை முதலானவை எவ்வாறு அமைய வேண்டுமென்பதைக் கற்பனை செய்தெழுவது கற்பனைக்கட்டுரை ஆகும். மக்களுக்கு நல்லொழுக்கம் புகட்டவும் உண்மை நெறி காட்டவும், அறியாமையை ஓட்டவும், அறிவை நிலைநாட்டவும் கருதிப் புனைந்தெழுதுவது புனைந்துரை கட்டுரை ஆகும். ஒவ்வொரு பொருளைப்பற்றியும் முறையாக ஆராய்ச்சி செய்து எழுதுவது ஆராய்ச்சிக் கட்டுரை ஆகும். உரிமையாட்சி, குடிமைப்பயிற்சி, ஐக்கியநாட்டுக் கழகம், பிற நாட்டின் தொடர்பு, சட்டங்கள், திட்டங்கள், படையும் பாதுகாப்பும், மாணவர் படைப்பயிற்சி முதலானவற்றைப் பற்றி எழுதுவது அரசியல் கட்டுரை ஆகும். கல்வி,

கேள்வி, ஆராய்ச்சி, இலக்கியம், தாய்மொழி வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி முதலானவற்றைப்பற்றி எழுதுவது அறிவியல் கட்டுரை ஆகும். நாட்டின் இயற்கைவளம், வளம் பெருக்குவதற்குரிய முறைகள், திட்டங்கள், நீர்த் தேக்கங்கள், விளைபொருள்கள், மறைந்துகிடக்கும் வளங் கள், அடிப்படைக்கல்வி, குடிசைத்தொழில், தொழிற் கல்வி, மூலப்பொருள்கள், பொருள்கள் சுழற்சி, வாணிகம், பொருள் மதிப்பு முதலானவற்றைப்பற்றி எழுதுவது பொருளியற் கட்டுரை ஆகும். சமூக ஒற்றுமை, வேற்றுமை நீக்கம், தீண்டாமை ஒழிப்பு, சாதிமுறை ஒழிப்பு, சமத்துவ வாழ்க்கை, மூடப்பழக்க வழக்க நீக்கம், குருட்டு நம்பிக்கை, போலித் துறவிகளின் போக்கு, மக்கள் ஏமாற்றம், உண்மைத் துறவிகளின் தொண்டு, சமூக சேவை இவற்றைப்பற்றி எழுதுவது சமூகமுன்னேற்றக் கட்டுரை ஆகும்.

எழுதும் விதம்: தலைப்பு விளங்கும்படி நடுவில் எழுதவேண்டும். பத்தி தொடங்கும்போது இடப்பக்கம் சிறிது இடம் விட்டெழுதவேண்டும். முதல் பத்தியில் தலைப்பை விளக்கியும், வகைப்படுத்தியும் காட்டவேண்டும். பின் பத்திதோறும் ஒவ்வொரு பகுதியை எடுத்துக் கொண்டு சிறு வாக்கியங்களால் விளக்கி முடிக்கவேண்டும். ஒரு பத்தி ஒரு பொருளைப்பற்றியதாக இருக்கவேண்டும்.

மேற்கோள்கள், பழமொழிகள், நீதிகள், குறளின் கருத்துக்கள் அடிகள் இவற்றை ஏற்ற இடங்களில் எடுத் தமைத்து விளக்கவேண்டும். நடை எளிதாகவும், பொரு ளுக்கேற்ற வண்ணம் சுவையாகவும் இருக்கவேண்டும். எழுதி முடித்தபின் முடிவுகள், பொருள் அமைவு, விளக் கங்கள், நிறுத்தக்குறிகள் முதலானவை சரியாக அமைந் துள்ளனவா என்று படித்துப் பார்த்து, திருத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு எழுதப்படும் கட்டுரைகள் சிறந்த னவாக விளங்கும்.

வினாக்கள்

1. கண்டம், மார்பு, மூக்கு இவற்றினின்று பிறக்கும் எழுத்துக்களெவை?
2. உடனிலை மயக்கம், வேற்றுநிலை மயக்கம் விளக்குக.
3. விளி ஏலாத பெயர்களெவை?
4. விளி ஏற்கும்போது மாறுபடும் முறைகள் எவை?
5. ஆகுபெயர்கள் ஒவ்வொன்றையும் காட்டுடன் விளக்குக.
6. செய்யும் என்னும் வினைமுற்றைக் காட்டுடன் எழுது.
7. பொதுவினைகள் எவை? காட்டுடன் எழுது.
8. எச்சத்திரிபு எத்துணை வகைப்படும்? காட்டுடன் விளக்குக.
9. உளப்பாட்டுப் பன்மை வினைமுற்று எத்துணை வகைப்படும்?
10. மன், என, தில், அம்ம என்னும் இடைச்சொற்கள் எவ்வெப் பொருள்களில் வரும்?
11. முன்னிலையில் வரும் அசைச்சொற்கள் எவை?
12. எல்லாவிடங்களிலும் வரும் அசைச்சொற்கள் எவை?
13. கெழு, மல்லல், கூர், கழி, தட, வை என்னும் உரிச் சொற்கள் எவ்வெப்பொருள்களில் வரும்? காட்டுடன் எழுது.
14. தொகையில் பொருள் சிறந்து நிற்குமிடங்களை எழுது.
15. மரபு என்பது யாது? காட்டுடன் எழுது.
16. காலவழுவமைதி, மரபுவழுவமைதியைக் காட்டுடன் எழுது.
17. ஒரு பொருட்பன்மொழி, இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர் இவற்றைக் விளக்கி வேற்றுமையை எழுதுக.
18. உபலட்சணம் என்பது யாது? காட்டுடன் எழுது.
19. உயிரீற்றில் இயல்பாக நிற்பவை எவை?
20. தளைகள் எத்துணை வகைப்படும்? இலக்கணம் எழுதுக;
21. வெண்டளையின் இலக்கணம் யாது?
22. வெண்பா வகைகளையும் அவற்றின் இலக்கணத்தையும் காட்டுடன் எழுது.
23. ஆசிரியப்பா வகைகளையும் அவற்றின் இலக்கணத்தையும் காட்டுடன் எழுது.
24. ஆசிரிய விருத்த இலக்கணம் யாது?
25. வேற்றுமை அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, நிரல் நிறையணி இவற்றின் இலக்கணத்தைக் காட்டுடன் எழுது.
26. அகப்பொருள் எத்துணை வகைப்படும்? விளக்குக.
27. புறப்பொருள் எத்துணை வகைப்படும்?
28. கட்டுரை எழுதுவதில் கவனிக்கவேண்டியவை எவை?
29. நலம் பாராட்டலில் எவ்வெவற்றை எடுத்து விளக்க வேண்டும்?

TAMIL NADU NOOL PATHIPPAGAM
WORAIUR, TIRUCHIRAPALLI

Wrapper Printed at Vasan Press, Allimal Street, Tiruchi.